www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்

LIBERATION TIGERS OF THAMIL EALAM

02-05-1984.

செய்தி ஆசிரியர்,

சென்னை.

## "புலிகள்" என்ற போர்வையில் சமூக விரோத சக்திகள்.

### விடுதலைப் புலிகள் இயக்கம் அறிக்கை.

எமது புனித விடுதலை இயக்கத்தின் பெயரைக் களங்கப்படுத்தும்வகையில் ஒருசில சமூக விரோத சக்திகள் தமிழ்நாட்டில் செயற்பட்டுவருகின்றன. இச் சக்திகள் எமது இயக்கத்தின் பெயரைப் பாவித்துச் சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றன. இவர்களை இனங்கண்டு தகுந்த தண்டனை வழங்குமாறு தமிழ்நாட்டு அரசை நாம் வேண்டிக்கொள்கின்றோம்.

சமீபத்தில் கும்பகோணத்திலிருந்து சென்ற வாலிபர் கோஷ்டி ஒன்று பெங்களூரில் சங்கபுரம் பகுதியில் ஒரு வங்கியைக் கொள்ளையடிக்க முயன்று பிடிபட்டதாகவும், விடுதலைப் புலிகளுக்குப் பணந்திரட்டவே தாம் இந்தக் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டதாக இக் கொள்ளைக் கோஷ்டி கூறியதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. இந்தக் கொள்ளைச் சம்பவத்துக்கும், எமது விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை நாம் அதிகாரபூர்வமாக அறிவிக்க விரும்புகிறோம். இந்தத் திருடர் கோஷ்டி எமது விடுதலை இயக்கத்தின் பெயரைத் துஷ்பிரயோகம் செய்ய முயன்றதை நாம் வலுவாகக் கண்டிக்கிறோம். இவர்களது இந்த நடவடிக்கை எமது இயக்கத்தை மாசுபடுத்தும் முயற்சியாக அமைந்ததுமட்டுமன்றி தமிழ்நாட்டு அரசுக்கும் சங்கடத்தைக் கொடுப்பதாக இருக்கிறது. இந்தச் சமூக விரோதக் கும்பலுக்குத் தமிழ்நாட்டு அரசு தகுந்த தண்டனை வழங்கும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

### பேராவூரணி கொலைச் சம்பவம்:
### விடுதலைப் புலிகள் மறுப்பு

தஞ்சை மாவட்டத்தில் பேராவூரணிக்கு அருகேயுள்ள பனை வயல்கிராமத்தில் ஒரு வயோதிப விவசாயி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை அதிகாரபூர்வமாக

தமிழீழ விடுதலைப் புலிகள்

LIBERATION TIGERS OF THAMIL EALAM

02.05 1984.

அறியத்தருகிறோம்.

தட்சணாமூர்த்தி என்ற இந்த விவசாயியின் பாதுகாப்பில் "விடுதலைப் புலி" இளைஞர் ஒருவர் தஞ்சம் புகுந்தார் என்றும், ஒரு கோஷ்டியினர் வந்து அந்த இளைஞரைக் கடத்திச் செல்ல முயன்றபோது தட்சணாமூர்த்தி குறுக்கிடவே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கிறது. இந்தக் கொலைச் சம்பவத்துக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. இந்தச் சம்பவத்தில் எமது விடுதலை இயக்கத்தின் பெயர் தவறுப் பாவிக்கப் பட்டிருக்கிறது. இந்தக் கொலைக்குக் காரணமாகவிருந்த சமூகவிரோதக் கும்பலை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தக் கொலைகாரக் கோஷ்டியைக் கண்டு பிடித்து, அவர்களுக்குக் கடும் தண்டனை வழங்குமாறு தமிழ்நாட்டு அரசை நாம் வேண்டிக் கொள்கிறோம்.

### பத்திரிகையாளருக்கு
### ஒரு வேண்டுகோள்!

தமிழீழ விடுதலைப் புலிகள் என்பது திரு. வே. பிரபாகரன் தலைமையிலான ஒரு புரட்சிகர விடுதலை இயக்கம். இது ஏனைய விடுதலை அமைப்புகளைவிடப் பழமை வாய்ந்தது, பலம் மிக்கது. கடந்த பன்னிரண்டுவருட காலமாகத் தொடர்ச்சியாகத் தீவிர ஆயுதப் போராட்டத்தை நடத்திச் சிங்கள அரசுக்கு ஒரு சிம்ம சொப்பனமாக விளங்குவதும் எமது இயக்கமே. ஆயுதப் போராட்டம் வாயிலாக ஒரு சுதந்திர, சமதர்மத் தமிழீழ அரசை நிறுவுவதே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதான அரசியல் இலட்சியம் ஆகும். வீரம், தியாகம், இலட்சிய உறுதி போன்ற பண்புகளால் சிறப்புப்பெற்ற எமது இயக்கம் ஈழத் தமிழர் மத்தியிலும், தமிழ்நாட்டிலும் மிகவும் செல்வாக்கைப் பெற்றிருக்கிறது. சர்வதேச ரீதியில் எமது விடுதலை இயக்கமே மிகவும் பிரபல்யமானது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், ஏனைய ஈழ விடுதலை அமைப்புகளுக்கும் வேறுபாடு தெரியாத காரணத்தினால் மற்றைய இயக்கங்களின் செயற்பாடுகளுக்கும் எமது விடுதலை இயக்கத்தின் பெயர் தவறாகப் பாவிக்கப்படுகிறது. இதனால் எமது இயக்கத்தின் தனித்துவம் பாதிக்கப்படுவதுடன் மக்கள் மத்தியிலும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே எமது விடுதலை இயக்கத்தின் பெயரைத் தப்பான முறையில் பிரயோகிப்பதைத் தவிர்க்குமாறு தமிழ்நாட்டுப் பத்திரிகையாளர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்